ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்· 440) Apr (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...4

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 260)

81. லோகபாலாயுதாநாம் து பூஜிதாநாம் க்ரமாதிஹ
வாம ஹஸ்தகநிஷ்டாத்யாஸ்திஸ்த்ர: ஸ்வதலமத்யகா:
82. தாஸாம் அங்குஷ்டத: ப்ருஷ்டே தர்ஜநீ ப்ரோநதா பவேத்
நாஸாவம்ச ப்ரதேசஸ்தா ததோ தக்ஷிணபாணிநா

குறிப்பு – இது லோகபாலர்களுடைய ஆயுதங்களின் முத்திரை ஆகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 405)

6-2-8. பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாதது ஓர்
கணக்கு இல் கீர்த்தி வெள்ளக் கதிர் ஞான மூர்த்தியினாய்
இணக்கி எம்மை எம் தோழிமார் விளையாடப்
போதுமின் என்னப் போந்தோமை
உணக்கி நீ வளைத்தால் என் சொல்லார் உகவாதவரே

பொருள் – அனைத்து சேதந அசேதநங்களையும், ப்ரளய காலத்தில், அவற்றின் பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றைப் பிரிந்து அறியாதவிதமாக ஒன்றாகச் சேர்த்து; ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன் அந்தந்த சேதனர்களுடைய கர்மங்களில் எந்தவிதமான குழப்பமும் ஏற்படாதபடி தேவர்கள், விலங்குகள் என்பதான வேறுபாடுகளுடன் பிரித்து ஸ்ருஷ்டித்து; இத்தகைய செயல்களைச் செய்தபோதிலும் தனது ஸ்வரூபத்திற்கு எந்தவிதமான வேறுபாடும் வந்துவிடாமல்; தன்னைப் போன்று இரண்டாவது ஏதும் இல்லை என்பதாக, எல்லையற்ற கீர்த்தி ஸமுத்திரத்தைக் கொண்டதான ஒளிர்ந்தபடி உள்ள ஸ்வரூப ரூப ஞானத்தையே வடிவமாகக் கொண்டவனே! என்னைப் போன்றே துக்கம் அடைந்துள்ள எனது தோழிமார்கள், நாங்கள் சம்மதிக்கும்படியான சொற்களைக் கூறி, “விளையாட வாருங்கள்” என்று விளையாட்டை ஒரு காரணமாகக் கூறி அழைத்ததால், நாங்களும் இங்கு வந்துள்ளோம். நீ இங்கு நிற்பதை அறியாமல் நாங்கள் வந்தோம். இப்படியாக வந்த எங்களை, உண்ணவும் கூடச் செய்யவிடாமல் துவளும்படிச் செய்கிறாய். இதனைக் கண்டு மகிழாதபடி குற்றம் கண்டுபிடிக்கும் இந்த ஊரில் உள்ளவர்கள் என்ன

உரைப்பார்கள்? அல்லது உகவாதவர்கள் என்பதற்கு ஏற்ப, “உனது மின்னிடை மடவார்கள்” என்றும் கொள்ளலாம்.

அவதாரிகை - கிட்டி நின்று இவர்களைச் சில மிறுக்குக்களைப் பண்ணப்புக்கான்; “இங்கே யிருக்கிலன்றோ இதெல்லாம் வேண்டுவது” என்று பார்த்து, ஒருவரொருவராகப் போகப்புக்கார்கள்; “இதுவோ பார்த்தபடி!” என்று வழியைப் பற்றி இருவிலங்காகக் கிடந்தான். உத்யாநமாகையாலே வழி ஓரடிப்பாடாயிருக்குமிறே. இப்பாட்டை ஜீயர் அருளிச்செய்யா நிற்கச்செய்தே ஆப்பானிருந்தவர், “இவர்களிவனைக் கடந்து போனார்களாகிற் செய்வதென்?” என்றுகேட்க, “அது ஆர் காரியம்? பின்னை இரண்டத்தொன்று ஸித்திக்கும் என்றன்றோ அவன்தான் கிடந்தது” என்றருளிச் செய்தார். நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான்; கடந்து போனார்களாகில் ஸம்ச்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.

விளக்கம் – இவர்களை அண்டி நின்று, இவர்களிடம் சில சொற்கள் கூறுபவனாக நின்றான். இதனைக் கண்ட இவர்கள், “இங்கு நாம் நின்றால் அல்லவோ இது போன்ற சில செயல்கள் செய்தபடி உள்ளான்” என்று எண்ணியவர்கலாக, அங்கிருந்து ஒவ்வொருவராக அகன்று செல்லத் தொடங்கினார். இதனைக் கண்ட இவன், “இதுவா உங்கள் திட்டம்” என்று வழியை மறித்தபடி, ஒரு யானை போன்று நின்றான். அவனைக் கடந்து செல்ல வேறு வழி இல்லையோ என்றால், அது மலர்கள் நிறைந்த சோலை என்பதால் ஒற்றையடிப் பாதை மட்டுமே உள்ளது. இந்தப் பாசுரத்திற்காக இவ்விளக்கங்களை ஸ்வாமி நஞ்ஜீயர் அருளிச்செய்தபோது, ஆப்பான் என்பவர், “அவர்கல் இவனைக் கடந்து செல்லலாம் அல்லவோ?”, என்றார். இதற்கு நஞ்ஜீயர், “அதனை யாரால் செய்ய இயலும்? அவ்விதம் செய்தால் இரண்டு விஷயங்கள் மட்டுமே நடக்கும்; தடை ஏற்பட்டு நிற்பது அல்லது அவனைத் தீண்டியபடி செல்வது என்பது மட்டுமே ஏற்படும். இவ்விதம் அல்லவோ அவன் கிடந்தான்”, என்றார். அவர்கள் தடைபட்டு நின்றால், தான் எண்ணியதை அடைந்தான் என்றாகும்; அவர்கள் கடந்து சென்றால், இவனைத் தீண்டுவதன் மூலம் சேர்க்கை என்னும் செயல் நிறைவேறப் பெற்றான் என்றாகும்.

அவதாரிகை - நீ வழியைப் பற்றிக் கிடவாகின்றாய்; நீ செய்கிறவையெல்லாம் உறவு உண்டாய்ச் செய்கிறாயென்றிருப்பர்கள்கிடாய்; நீ ஸர்வ விஷயமாகப் பண்ணும் லீலைக்கோரளவு உண்டோ? உன்னையொழிந்த வஸ்துக்களெல்லாவற்றுக்கும் கோடி விகாரத்தைப் பண்ணி, அவிக்ருதனாயிருப்பானொருவனிறே; அப்படியே எங்களை விக்ருதராகப் பண்ணி நீ அவிக்ருதனாயிரா நின்றாய்!

விளக்கம் – " நீ வழியைப் பற்றி" என்பது தொடங்கமாக, "பிணக்கி" என்பது முதல், "வேதியானது" என்பது முடிய உள்ள முதல் வரிக்கான அவதாரிகையைக் கூறுகிறார். நீ இந்த வழியை மறித்தவனாகக் கிடந்தபடி உள்ளாய். நீ செய்யும் இவை அனைத்தையும், உறவு உள்ளதாகக் கொண்டு நீ செய்கிறாய் என்றே பலரும் எண்ணுவர். அனைவருடைய விஷயமாக நீ செய்யும் லீலைகளுக்கு ஓர் அளவு உள்ளதோ? உன்னைத் தவிர உள்ள அனைத்து வஸ்துக்களையும் கோடிக்கணக்கான மாற்றங்கள் அடையும்படிச் செய்கிறாய். ஆனால் நீயோ, பிரிவால் வந்த கலக்கம் மற்றும் சேர்க்கையால் ஏற்படும் இன்பமயமான ரூப மாறுதல் போன்ற எதனையும் அடையாமல் உள்ளாய். எங்களை மாறுபாடுகள் அடையும்படியாகச் செய்து விட்டு, நீ எந்தவிதமான மாறுதல்களும் அடையாமல் உள்ளாய்.

வ்யாக்யானம் - (யாவையும் யாவரும் பிணக்கி) தன்பக்கல் பொருந்துகைக்கு நினைவில்லாதவற்றையும், நினைவாலே பொருந்தாதவற்றையுங் கூட்டி, "தம: பரேதேவ ஏகீ பவதி" என்று தன்னோடு அவிபக்தமாம்படி கலசி. (பிழையாமல் பேதித்தும்) தப்பாமல் பிரித்தும். வயிற்றிலே வைத்துப் புறப்பட விடுதல், ஸம்ஹரித்துப் புறப்பட விடுதல். ஓரோக்ஷேபங்களிலே யமர்ந்த நிலங்களிலே குடிவாங்கிப் பின்பு தெளிந்தவாறே ஸ்வஸ்த்தாநங்களிலே புகுந்து, விட்ட கார்யங்களிலே அதிகரிப்பாரைப்போலே. ஒருத்தன் பண்ணின கர்மம் வேறொருத்தன் சென்று புஜியாதபடி தன்பக்கலினின்றும் பிரித்தும். (பேதியாததோர் கணக்கில் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞானமூர்த்தியினாய்) கார்யாவஸ்த்தமானதுவே காரணாவஸ்த்தமானாலும், அசித்கதமான ஸூக்ஷ்ம பரிணாமம், சேதநகதமான அஜ்ஞாநம், ஸ்ருஷ்டி காலத்தில் அசித்கதமான ஸ்வரூபாந்யதாபாவம், சேதநகதமான ஸ்வபாவாந்யதாபாவம், ஆக இப்பேதங்கள் ஒன்றும் இன்றிக்கே. ஏகரூபமாய், அத்விதீயமாய், அநவதியான கீர்த்தி

ஸமுத்ரத்தையுடைத்தாய், ப்ரபாரூபமான ஸங்கல்பரூப ஜ்ஞாநத்துக்கு ஆச்ரயமானவனே! எல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலிற் சிதையாத மனஞ்செய் ஞானமிறே. இத்தால் விச்லேஷ தசையில் கலக்கமும், ஸம்ச்லேஷ தசையில் போகரூப விக்ருதியுமின்றிக்கே ஏகரூபனென்கை.

விளக்கம் – (யாவையும் யாவரும் பிணக்கி) - "யாவையும்" என்று முதலில் அசேதநங்களைக் கூறி, அதன் பின்னர் "யாவரும்" என்று சேதநர்களை ஏன் கூற வேண்டும்? இதற்கு விடை அளிக்கிறார். தன்னிடம் பொருந்துவதற்கான எண்ணம் ஏதும் ஏற்படாமல் உள்ள வஸ்துக்கள் மற்றும் அவ்விதம் சேரவேண்டும் என்ற எண்ணம் பொருந்தாமல் உள்ள வஸ்துக்கள் ஆகிய இரண்டையும் சேர்த்து, கட உபநிஷத்தில் (2) – தம: பரேதேவ ஏகீ பவதி - இருளாக உள்ள ப்ரக்ருதியானது பரமாத்மாவுடன் ஒன்றாக ஆகிறது - என்பதற்கு ஏற்ப, தன்னுடன் வேற்றுமையில்லாதபடிக் கலந்து. பிணக்குதல் என்றால் கலத்தல். (பிழையாமல் பேதித்தும்) - ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன் தவறின்றி ஸ்ருஷ்டித்தல். அவாந்தர ப்ரளயகாலத்தில் தனது வயிற்றில் வைத்துக் காப்பாற்றிய பின்னர் ஸ்ருஷ்டிக்கிறான். ஒவ்வொரு கலகத்திலும் அமர்ந்த இடத்தில் குடி வாங்கிய பின்னர் தெளிந்தவுடன் தங்கள் தங்கள் இடத்திற்குச் சென்று, தாங்கள் விட்ட செயல்களை மீண்டும் தொடங்குவது போன்று, ஸ்ருஷ்டி காலம் ஏற்படுகிறது. ஒருவன் செய்த கர்மத்தின் பலனை மற்றொருவன் அனுபவிக்காதபடியாக, தன்னிலிருந்து அவர்களை ஸ்ருஷ்டித்தும். (பேதியாததோர் கணக்கில் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞானமூர்த்தியினாய்) - கார்ய நிலை மற்றும் காரண நிலை என்று எந்த நிலையாக உள்ளபோதிலும், காரண நிலையில் உள்ளதான அசேதந வஸ்துக்களுடைய ஸூக்ஷ்மமான நிலை, சேதநர்களைப் பற்றியுள்ள அறியாமை, கார்ய நிலையான ஸ்ருஷ்டி காலத்தில் அசேதநங்களுடைய ஸ்தூலமாக உள்ள நிலை மற்றும் சேதநர்களுடைய ஞான மலர்ச்சி ஆகிய பேதங்கள் ஏதும் இல்லாமல். ஒரே ரூபமாக, இரண்டாவது ஏதும் இல்லாதபடியாக, எல்லையற்ற கீர்த்தியை ஸமுத்திரமாகக் கொண்டும், ஒளி ரூபமாக உள்ள ஸங்கல்ப ஞானத்திற்கு இருப்பிடமாக உள்ளவனே! அதாவது பிரிய நேர்ந்தால் கலக்கமும், சேர்க்கையில் இன்பத்தை வெளிப்படுத்தும் ரூபமும் இல்லாத நிலை; ஒரே வடிவமாக உள்ளவன்.

வ்யாக்யானம் - (கணக்கில் கீர்த்தி வெள்ளம்) "இப்படிப்பட்ட குணங்களை அளவிடுவோம்" என்று பார்த்தாருண்டாகில் இளைத்துக் கால்வாங்கும்படி இருக்கை. (கதிர் ஞானமூர்த்தியினாய்) இப்படி கூட்டுவன கூட்டிப் பிரிப்பன

பிரித்தாலும், ஜ்ஞாநத்துக்கொரு குறைவற்றிருக்கை. (கதிர் ஞானமூர்த்தியினாய்) கார்யங் கொண்ட தென்னா மழுங்காதிருக்கை; கார்யங் கொள்ளக் கொள்ளப் புகர்த்து வருகை. (கதிர் ஞானமூர்த்தியினாய்) ஜ்ஞாந ஸ்வரூபனாயுள்ளவனே! (இணக்கியித்யாதி) நீ செய்கிறவற்றால் ப்ரயோஜனமுள்ளது நீ யிருந்தவிடத்தே நினைத்துத் தேடி வந்தாருண்டாகிலன்றோ! (இணக்கி) இசையும்படி வார்த்தை சொல்லி. "அவ்விடம் கிருஷ்ணன் வாராதவிடம்" என்றுகிடீர் சொல்லிக் கொண்டு போந்தது. (எம்மை) உன்னோட்டைக் கலவி அபாயம் என்றறியாத எங்களை. (எந்தோழிமார்) உன்னை வெறுக்கிறதென்? உன்பக்கல் குற்றமுண்டோ? சேர்த்தாராலே வந்ததுகிடீர்! பகவத் விஷயத்தில் வைலக்ஷண்யம் நெஞ்சிலேபட்டால் உபகாரகரைக் கொண்டாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. "நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்" என்று இங்கோடு அங்கோடு வாசியற அவர்களாலே வருமதிறே. (எந்தோழிமார்) ஸஜாதீயராயிறே சேர்ப்பது.

விளக்கம் – (கணக்கில் கீர்த்தி வெள்ளம்) - "இப்படிப்பட்ட குணங்களை நாம் அளவிடுவோம்" என்று முயற்சி செய்பவர்கள், இயலாமல் தளர்ந்து பின்வாங்கும்படி இருத்தல். (கதிர் ஞானமூர்த்தியினாய்) - இவ்விதம் சேர்வதைச் சேர்த்து, பிரிப்பவற்றைப் பிரித்தாலும் ஞானத்தில் எந்தக் குறையும் இல்லை. (கதிர் ஞானமூர்த்தியினாய்) – இந்த ஞானத்தின் மூலம் கார்யத்தை நிறைவேற்றியபடி இருந்தாலும் மழுங்காமல் இருத்தல். இவ்விதம் கார்யம் செய்யச்செய்ய மேன்மேலும், வளர்ந்தபடி இருத்தல். (கதிர் ஞானமூர்த்தியினாய்) - ஞானஸ்வரூபமாக உள்ளவனே! (இணக்கியித்யாதி) - நீ உள்ள இடத்தைத் தேடி யாரேனும் வந்தால் அல்லவோ நீ செய்யும் இந்தச் செயல்களால் பயன் உள்ளது? (இணக்கி) - சம்மதிக்கும்படி சொற்கள் உரைத்து. அதாவது "அந்த இடமானது க்ருஷ்ணன் வராத இடமாகும்" என்று சொல்லிக் கொண்டு சென்று, நாங்கள் அங்கு வருவதற்குச் சம்மதிக்கும்படியாகச் செய்யும் தன்மை. (எம்மை) – உன்னுடன் சேர்வது அபாயம் என்று அறியாத எங்களை. (எந்தோழிமார்) – உன்னை நாங்கள் ஏவ் வெறுக்கிறோம்? உன்னிடம் என்ன குற்றம் உள்ளது? சேர்த்து வைத்தவர்களிடம் அல்லவோ உள்ளது? பகவத் விஷயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு உண்டாகாமல், அவ்விதம் சேர்த்து வைத்து உதவி செய்தவர்களைக் கொண்டாடவேண்டும் என்ற எண்ணம் அல்லவோ எங்களிடம் உள்ளது? அவனைப் பற்றும் காலத்தில் அல்லாமல், சேர்ந்துள்ள நிலையிலும் ஆசார்யன் துணை அவசியமா என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; ஸ்தோத்ரரத்னம் (2) -

நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம் – எந்த நாதமுனிகளுடைய இரண்டு திருவடிகளும் எனக்கு எப்போதும் சரணமோ - என்பது காண்க; இதனைப் போன்று எந்த நிலையிலும் அவர்கள் துணை வரும் அல்லவோ? (எந்தோழிமார்) - ஒரே பிரிவினராக உள்ளவர்கள் அல்லவோ சேர்க்கவேண்டும்?

வ்யாக்யானம் - (விளையாடப் போதுமினென்னப் போந்தோமை) அவர்கள் உனக்குப் பெருநிலை நிற்பதறியப் பெற்றிலோம். சொலவுக்குமேல் அகவாய் ஆராயப் பெற்றிலோம். "நீயுண்டு" என்றறிந்தோமாகில் இவ்விடமென்று நினையோம்; "அவர்களுனக்குப் பார்வை" என்னுமிடம் அறியப் பெற்றிலோம். "பொகடுங்கோள்; ஆனாலென்? அவர்கள் சொல்லப் போந்திகோளாகில் உங்களுக்கு வந்த அநர்த்தமென்?" என்றான். (உணக்கி நீ வளைத்தால்) உணக்குகையாவது தரிக்கமாட்டாதே துவளும்படி பண்ணுகை. எங்களுக்கு இதுக்குமேல் வருவதென்? கால் வாங்கிப் போகப் பெறுகிறிலோம்; கிட்டி நின்று முகம் பார்த்து அநுபவிக்கப் பெறுகிறிலோம். இது காண வேண்டாதவர்கள் என் சொல்லுவர்கள்? "எத்தைச் சொல்லுவது: என்னை 'ஈச்வரன்' என்றிகோளாகில், உங்களை 'இடைச்சிறுபெண்கள்' என்றிகோளாகில், இனி எத்தைச் சொல்லுவது?" என்றான். "நீ ஸர்வேச்வரனான இதுவும், நாங்கள் இடைப்பெண்களான இதுவுமேயிறே சொல்லுகைக்கு ஹேதுவும்". ஈச்வரனோடொக்கப் பழி சொல்லுகைக்கு இவர்கள் தாம் ஒரு நப்பின்னைப்பிராட்டி போல்வார் ஆகாதேதான். "அது என்தான்? என்னோடு உங்களுக்கு பாவபந்தமில்லை என்னாநின்றிகோளாகில் இத்தால் வருவதென்?" என்றான்.

விளக்கம் – விளையாடப் போதுமினென்னப் போந்தோமை) - அவர்கள் உனக்கு உதவ செய்தபடி உள்ளதை நாங்கள் அறியவில்லை. உன்னுடைய புறச்சொற்கள் கூறுவது மட்டுமே நாங்கள் அறிகிறோம் அல்லாமல், உள்ளத்தில் உள்ளதை அறியவில்லை. இங்கு நீ உள்ளாய் என்று நாங்கள் அறிந்திருந்தால், இந்த இடத்தைக் கூட நாங்கள் அறியாதவர்கள் போன்று, இங்கு வராமலேயே இருந்திருப்போம். பறவைகளை வைத்துப் பறவைகளைப் பிடிப்பது போன்று, அவர்கள் உனக்கு உள்ளனர் என்று அறிந்திருந்தால் இங்கு வராமல் இருந்திருப்போம். இதனைக் கேட்ட இவன், "அவை அனைத்தையும் விட்டுத்தள்ளுங்கள். நீங்கள் கூறிய அனைத்தும் உண்மை என்று இருந்தாலும், அதனால் என்ன? அவர்கள் ஏதோ கூறும்விதமாக நீங்கள் உள்ளீர்கள் என்றாலும்,

அதனால் உங்களுக்கு நேரக்கூடியது என்ன?", என்றான். இதற்கு விடை அளிக்கிறார்கள். (உணக்கி நீ வளைத்தால்) – உணக்குதல் என்றால், தாங்கி நிற்க இயலாமல் துவளும்படியாகச் செய்தல். எங்களுக்கு இதற்கும் மேலாக என்ன நடக்கவேண்டும்? எங்கள் கால்கள் நீ உள்ள இந்த இடத்தை விட்டு அகன்று செல்ல இயலாதபடி உள்ளதால் நாங்கள் இங்கு நிற்கிறோம். உன் அருகில் எப்போதும் நின்று உனது திருமுகத்தைக் காண்பதற்கு இயலாமல் உள்ளோம். நீயும் நாங்களும் மட்டுமே நிற்கும் இந்த நிலையைக் காண்பதற்கு விருப்பம் அற்றவர்கள் என்ன கூறுவார்கள்? இதனைக் கேட்ட இவன் அவர்களிடம், "நான் எதனைக் கூறவேண்டும்? என்னை ஈச்வரன் என்றும், உங்களை இடையர் சிறுப்பெண்கள் என்றும் கூறுகிறீர்கள். இதனைக் காட்டிலும் மேலே வேறு என்ன கூற உள்ளது?", என்றான். இதற்கு இவர்கள், "நீ ஸர்வேச்வரனாக உள்ள நிலையும், நாங்கள் ஆயர்குலப் பெண்களாக உள்ள நிலையுமே இவ்விதம் கூறுவதற்குக் காரணமாக உள்ளது" என்றனர். ஆனால் மற்றவர்கள் இவர்களை ஈச்வரனுடன் சேர்த்து வைத்துப் பழி கூறுதல் என்பது, இவர்கள் நப்பின்னைப்பிராட்டி போன்ற ஆயர்குலப்பெண்கள் என்பதாலோ? இதனைக் கேட்ட இவன், "இவ்விதம் இருந்தால் என்ன? என்னுடன் உங்களுக்கு எந்தவிதமான ஒட்டும் உறவும் இல்லை என்றால், அவர்கள் கூறுவதால் வருவது என்ன?", என்றான்.

வ்யாக்யானம் - (என் சொல்லாருகவாதவரே) "உன்பக்கல் எங்களுக்கு பாவபந்தமில்லை" என்று அறிவர்களோ உகவாதார்? நீ அல்பம் கால்தாழ்த்த இதுவே ஹேதுவாக "ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்று" என்னார்களோ? நீ வளைக்கிற உன்னையும், வளைப்புண்கிற எங்களையும் அறிந்தோ அவர்கள் வார்த்தை சொல்லுவது? (என் சொல்லாருகவாதவரே) உன்னுடைய மின்னிடை மடவார் உன்னை நெகிழ வார்த்தை சொல்லுவர்கள். பிரிவாற்றாமல் கண்ணாஞ் சுழலையிடுகிறவர்கள் எத்தைச் சொல்லார்?

விளக்கம் – (என் சொல்லாருகவாதவரே) - இந்த உறவுமுறையையும், நாங்கள் உன்னுடன் இப்படியாக இணைந்து நிற்பதையும் கண்டு மகிழாதவர்கள், உனக்கும் எங்களுக்கும் எந்தவிதமாக உறவும் இல்லை என்பதை அறிவார்களோ? நீ சிறிது காலதாமதம் செய்து இங்கு வந்தாய்; இதனையே காரணமாகக் கொண்டு,

இவர்களுக்குள் சேர்க்கை உள்ளது என்று கூறமாட்டார்களோ? எங்களை வளைக்கும் உன்னையும், உன்னால் வளைக்கப்படும் எங்களையும் நங்கு அறிந்த பின்னரோ அவர்கள் இவ்விதம் உரைக்கிறார்கள்? அல்லவே! (என் சொல்லாருகவாதவரே) – உன்னுடைய “மின்னிடை மடவார்”, நீ நெகிழும்படியான சொற்களைக் கூறுவார்கள். உனது பிரிவாற்றாமையை பொறுக்க இயலாமல் தளர்ந்தபடி உள்ளவர்கள் என்ன கூறுவர்?

6-2-9. உகவையால் நெஞ்சம் உள் உருகி உன் தாமரைத் தடம் கண் விழிகளின்
அக வலைப் படுப்பான் அழித்தாய் உன் திருவடியால்
தகவு செய்திலை எங்கள் சிற்றிலும் யாம் அடு சிறு சோறும் கண்டு நின்
முக ஒளி திகழ முறுவல் செய்து நின்றிலையே

பொருள் – மிக்க மகிழ்வு காரணமாக மனமானது உருகும்படியாக, தாமரை போன்று மலர்ந்த உனது பெரிய திருக்கண்கள் என்னும் வலைக்குள் அகப்படுத்தும் பொருட்டு, எங்களுடைய மணல்வீடுகளையும், மணல் கொண்டு உண்டாக்கிய விளையாட்டுச் சோற்றையும் பார்த்தபடி, உனது திருமுகத்தில் ஒளி வீசும்படியாகப் புன்முறுவல் செய்து இங்கு நிற்கவேண்டாம். உனது திருவடிகளால் இவற்றை நீ கலைத்தாய். இதில் இரக்கம் இல்லாதபடி நீ செய்கிறாய்.

அவதாரிகை – “இவன் ‘போகவொட்டேன்’ என்று வளைத்துக் கிடந்ததுக்கு ப்ரயோஜநமுள்ளது இவனுக்கு நினைத்தபடி பரிமாறப் பெற்றாலன்றோ? ஒரு தேச விசேஷத்திலே முக்தர் ஸம்ஸாரிகளோடு உறவற்றிருக்குமாபோலே இவன் முகம் பாராதேயிருக்கிறோம்” என்று அத்யவஸித்துப் பேசாதேயிருந்தவாறே, “தன்னை நினைத்துக் கொண்டிருந்தோம் என்றிருக்கும் இவன்” என்று “அந்யபரதை தோற்றச் சிற்றிலிழைப்போம்” என்று இழைக்கப் புக, "என்னைப் பாராதே இருப்பதுமன்றிக்கே சிறிது அந்யபரதை பண்ணுவதே!" என்று சிற்றிலையும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே அழிக்க, அத்தாலே அவர்களுக்குச் சீற்றம் பிறந்து, தங்கள் ஸங்கல்பத்தை மறந்து அவன் முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அவனுடைய அபிமத ஸித்திக்கும் ஸாதநம் திருவடிகள்காணும். அடியுடையார்க்கெல்லாம் சாதித்துக்கொள்ளலாமே.

விளக்கம் – “இவன் நம்மை ‘போக விடமாட்டேன்’ என்று வளைத்து நின்றான்; ஆனால் நாம் இவன் எண்ணியபடி இவனுடன் சில பரிமாற்றங்கள் செய்தால்

அல்லவோ இவனுடைய இந்தச் செயலுக்குப் பயன் உள்ளது? பரமபதத்தில் உள்ள முக்தர்கள், ஸம்ஸாரிகளுடன் எந்தவிதமான உறவும் இல்லாதபடி உள்ளது போன்று, இவன் முகத்தை நாங்கள் பாராமல் உள்ளோம்" என்று உறுதியாக நின்று, ஏதும் உரையாடாமல் இருந்தனர். ஆனால் உடனே அவர்கள் தங்கள் மனதில், "நாம் இவ்விதம் ஏதும் பேசாமலும் செய்யாமலும் இருந்தால், இவனை நாம் எண்ணியபடி உள்ளதாக இவன் எண்ணுவான். ஆகவே நாம் வேறு ஏதேனும் ஒன்றைக் குறித்து எண்ணுவதாக காண்பித்துக் கொள்ளும் விதமாக, மணல் வீடுகள் கட்டுவோம்", என்று எண்ணி, மணல் வீடுகளை அமைக்கத் தொடங்கினார்கள். இதனைக் கண்ட இவன், "நீங்கள் என்னைப் பார்க்காமல் இருப்பதுடன் மட்டும் அல்லாமல், வேறு சிந்தனையுடன் மணல் வீடு அமைப்பதோ?", என்று கூறியபடி அந்த மணல் வீடுகளையும், மணல் சோற்றையும் கலைத்தான். இதனால் இவர்களுக்குச் சீற்றம் உண்டானது. தாங்கள் அவனுடன் உரையாடக்கூடாது என்று நின்ற உறுதியை மறந்து, அவன் திருமுகத்தை நோக்கி உரைக்கிறார்கள். அவனுடைய விருப்பம் நிறைவேறுவதற்கும் கூட அவனுடைய திருவடிகளே உதவுகின்றன. ஆக ஐச்வர்யம் உள்ளவர்களும், திருவடிகளை உடையவர்களும் இப்படியாகச் சாதித்துக் கொள்ளலாம் அல்லவோ?

வ்யாக்யானம் - (உகவையால் நெஞ்சமுள்ளுருகி) வாராய்! உன் ப்ரவ்ருத்தி வ்யர்த்த ப்ரவ்ருத்தி காண்; பிரிந்து நெஞ்சைப் புண்படுத்துகையாலே வந்த உருகுதலொழிய, எங்களுக்கு உகவையால் நெஞ்சமுள்ளுருகிப் பண்ணவிறே நீ பார்த்தது; அது செய்யப் போகாது. (உன் தாமரையித்யாதி) பகற்கண்ட குழியிலே விழவிட்டகப்படுத்துவான்; த்ருஷ்டி பந்தத்தாலேயிறே அநந்யார்ஹமாக்குவது. தாமரைபோலே பரிமளத்தையும் குளிர்த்தியையும் சிவப்பையுமுடைத்தாய், போக்தாக்களா லுண்டறுக்க வொண்ணாத போக்யதா ப்ரகர்ஷத்தையுடைய திருக்கண்களின் நோக்காகிற வலையுள்ளே அகப்படுத்துகைக்காக. (அகவலை) வலைக்குள்ளே. அகவலை - அகவிய வலை என்றுமாம். "கண்ணென்னும் நெடுங்கயிறி"றே. கண்ணிலேயகப்பட்டால், ஜ்வர ஸந்நிபதிதரைப் போலப் பிதற்றுமித்தனையிறே; "தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவுந் தலைமகனை" என்கிறபடியே.

விளக்கம் - (உகவையால் நெஞ்சம் உள்ளுருகி) - உனது இந்தச் செயல்கள் அனைத்தும் வீணான செயல்களே ஆகும். இவனுடைய செயல்கள் மற்றும் அது

வீணான விதம் ஆகியவற்றை அடுத்து கூறுகிறார்கள். எங்களைப் பிரிந்து எங்களுடைய நெஞ்சத்தைப் புண்படுத்தி, அதனை உருகும்படியாகச் செய்ய நீ எண்ணுகிறாய். அது நடக்காது. (உன் தாமரையித்யாதி) - அழகான திருக்கண்கள் என்னும் வலையில் அகப்படுத்துகிறான்; கண்பார்வை என்னும் பந்தம் மூலமாக, மற்றவர்களுக்கு அல்லாமல் இவனுக்கு மட்டுமே வசப்படுதல் என்பதைச் செய்கிறான். இந்தப் பார்வையை வீசுவது ஏன் என்பதற்கு விடை அளிக்கிறார்; தாமரை போன்ற பரிமளம், குளிர்ச்சி மற்றும் சிகப்பு போன்றவற்றைக் கொண்டதாகவும், எத்தனை அனுபவித்தாலும் முற்றிலும் அனுபவித்தோம் என்ற மனநிறைவு ஏற்படுத்தாமல் உள்ளதும், மகிழ்வை வெளிப்படுத்துவதும் ஆகிய திருக்கண்களின் பார்வை என்ற வலையில் அகப்படுத்தவே ஆகும். (அகவலை) - வலைக்குள். அகவலை என்றால் நீண்ட பெரிய வலை என்னும் கூறலாம். நாச்சியார் திருமொழி (14-4) - “கண்ணென்னும் நெடுங்கயிறு - அல்லவோ? அவனுடைய கண்பார்வையில் அகப்பட்டவர்கள், ஜ்வரம் வந்தது போன்று பிதற்றியபடியே இருப்பர் அல்லவோ? திருவாய்மொழி (2-6-3) – தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவுந் தலைமகனை – என்பதும் காண்க.

வ்யாக்யானம் - (அழித்தாயுன் திருவடியால்) ஸங்கல்பத்தாலழிக்கலாவது தன் சிற்றிலிறே; இவர்களுடைய சிற்றில் ஸ்பர்சித்தழிக்கவேணுமே: உன் சிற்றிலழிக்கும் பரிகரமமையாதோ இதுக்கு? ஜகதுபஸம்ஹாரம் பண்ணுவது ஸங்கல்பத்தாலேயிறே. சேஷபூதனுக்குத் திருவடிகள் உத்தேச்யமானவோபாதி, ப்ரணயிநிகளுக்கும் திருவடிகளுத்தேச்மாயிறேயிருப்பது. (அழித்தாய்) வெறுஞ் சிற்றிலையன்று காண், நீயழித்தது; எங்களகவாயையும் அழித்தாய்காண்; “சிற்றிலோடெங்கள் சிந்தையும்” சிதைத்தாய்காண். காலாலே சிற்றிலையழித்து, கண்ணாலே யெங்களபிஸந்தியையும் அழித்தாய்காண் என்கிறார்கள்.

விளக்கம் – (அழித்தாய் உன் திருவடியால்) - இவர்களுடைய மணல் வீடுகளைத் திருவடிகளால் அழிக்கவேண்டுமோ, அவற்றைத் தனது எண்ணம் மூலமே அழிக்க இயலாதோ என்பதற்கு விடை அளிக்கிறார். தனது ஸங்கல்பம் மூலம் இவன் அழிப்பது ப்ரளய காலத்தில், இந்த உலகம் என்னும் மணல் வீட்டை ஆகும். ஆனால் இவர்கள் உண்டாக்கிய மணல் வீடுகளைத் தனது திருக்கரத்தாலும் திருவடியாலும் தீண்டி அல்லவோ அழிப்பதாக உள்ளது? உனது மணல் வீடாகிய இந்த ஜகத்தை அழிக்கும் விதம் இதற்கும் போதாதோ? ஜகத்தை அழிப்பது

ஸங்கல்பம் கொண்டு அல்லவோ? அடிமையாக உள்ளவனுக்கு எஜமானனுடைய திருவடிகள் இலக்காக உள்ளது போன்று, காதலிகளுக்கும் காதலனுடைய திருவடிகள் அல்லவோ இலக்காக உள்ளது? (அழித்தாய்) - நீ அழித்தது வெறும் மணல் வீடுகளை மட்டும் அல்ல, எங்களுடைய நெஞ்சத்தையும் சேர்த்து அழித்தாய். நாச்சியார் திருமொழி (2-9) – சிற்றிலோடு எங்கள் சிந்தையும் – என்பது காண்க. உனது திருவடிகளால் எங்கள் மணல் வீடுகளை அழித்து, திருக்கண்களால் எங்களுடைய எண்ணங்களையும் அழித்தாய் என்கிறார்கள்.

வ்யாக்யானம் - (தகவு செய்திலை) க்ருபையுடையார் செய்வதைச் செய்திலை. பிரிந்தபோதே ப்ரணயித்வம் போயிற்றிறே; இனிக் கண்ணுடையார் செய்வதும் செய்திலை. கண் படைத்ததுக்கு ப்ரயோஜநம் நல்லது கண்டுகொண்டிருக்கவன்றோ? “உன் முகத்தன கண்களல்ல”வே! “நான் செய்த குறையென்?” என்ன, (எங்கள் சிற்றிலித்யாதி) உன் ஸ்ருஷ்டிபோலே அநுபாதேயமோ எங்கள் ஸ்ருஷ்டி? உபாதேயமன்றோ? “என்னுடைய ஸ்ருஷ்டி அநுபாதேயமானபடியென்? உங்கள் ஸ்ருஷ்டி உபாதேயமானபடியென்?” என்னுமே அவன்; உன்னைப்போலே நெருப்பும் காற்றும் அன்னலுந் துன்னலுமாக விட்டு கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டித்ததோ இது? “வண்டல் நுண்மணல்” தெள்ளி யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டதன்றோ இது!

விளக்கம் – (தகவு செய்திலை) - கருணை உள்ளவர்கள் செய்யும் செயலை நீ செய்யவில்லை. ஆனால் காதலியானவள் “க்ருபை செய்யவில்லை” என்று கூறலாமோ என்பதற்கு விடை அளிக்கிறார். பிரிந்து சென்றபோதே காதல் தன்மையும் போனது. அடுத்து “கண்” என்பதற்கு ந்யாயம் என்பதாகப் பொருள் கொண்டு கூறுகிறாள்; கண்கள் கொண்டவர்கள் செய்யும் செயலையும் செய்யவில்லை; கண்கள் உள்ளதன் பயன் என்னவென்றால், நல்லவற்றை ஆராய்ந்து ஏற்பது அல்லவோ? நாச்சியார் திருமொழி (2-5) - உன் முகத்தன கண்களல்ல – என்பது காண்க. இவற்றைக் கேட்ட இவன், “நான் செய்த குற்றம் என்ன?”, என்பதற்கு விடை அளிக்கிறாள். (எங்கள் சிற்றிலித்யாதி) – “உனது ஸ்ருஷ்டியைப் போன்று, ஏற்கத்தகாதபடி உள்ளதா எங்கள் இந்த மணல் வீடுகள்? இந்த எங்கள் படைப்பானது ஏற்கத்தக்கவை அல்லவோ?”, என்றனர். இதற்கு இவன், “எனது ஸ்ருஷ்டி ஏற்கத்தகாதபடி உள்ளது எப்படி? உங்களுடைய இந்தப்

படைப்பானது ஏற்கத்தக்கபடி உள்ளது எப்படி?” என்றான். இதற்கு இவர்கள், “எங்களுடைய இந்த மணல்வீடுகளில் ஸ்ருஷ்டி என்பது, உன்னுடைய ஸ்ருஷ்டியைப் போன்று நெருப்பும், காற்றும், வெயிலும், மழையும் கொண்டு கர்மங்கள் காரணமாக உண்டாகப்பட்டதோ? அல்ல. இவை, நாச்சியார் திருமொழி (2-5) - வண்டல் நுண்மணல் - என்பதற்கு ஏற்ப வளையல் நிறைந்த எங்கள் கைகளால், மிகவும் சிரமப்பட்டு உண்டாக்கப்பட்டது அல்லவோ?

வ்யாக்யானம் - (யாமடு சிறுசோறுங் கண்டு) நீ யடு சிறுசோறு நிர்மால்யத்தோபாதி புறம்பு ஒருத்தர்க்கு புஜிக்கலாகாது; நீயே புஜிக்குமத்தனை; “அத்தா பரமாத்மா”விறே. நாங்களடு சிறுசோறு “மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக் கூடியிருந்து” புஜிக்குமதன்றோ? (கண்டு நின் முகவொளி திகழ முறுவல் செய்து நின்றிலையே) எங்களுடைய லீலா விநோதங் கண்டு ப்ரீதனாய், உன்னுடைய முகவொளி திகழ மந்தஸ்மிதம் பண்ணி நிற்கமாட்டிற்றிலையே; இங்ஙன் செய்தவிடம் தக்கோர்மை செய்தாயல்லையே என்று இன்னாதாகிறார்கள். (தகவு செய்திலை) நாங்கள் சிற்றிலிழைக்கிறோமாகப் பாவித்துக் கடைக்கண்ணாலே உன் முகவொளியையும் முறுவலையுங் கண்டு கொண்டிருக்க வொட்டிற்றிலையே. முழுக்கப் பார்க்கில் எல்லாரோபாதியுமாமே: ப்ரணயியைப் பார்ப்பது கடைக்கண்ணாலேயிறே? எங்ஙனே பாராதேயிருந்து சிற்றிலிழைத்தார்கள்தான்!

விளக்கம் – (யாமடு சிறுசோறுங் கண்டு) - நீ சமைக்கும் மணல்சோறு என்பது சிவன் கோயில் நிர்மால்யம் போன்று வேறு யாராலும் அனுபவிக்க இயலாது; உன்னால் மட்டுமே அனுபவிக்க இயலும். ஆனால் நாங்கள் சமைக்கும் இந்த மணல் சோறு, திருப்பாவை (27) - மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக் கூடியிருந்து - என்பதாக அனைவரும் சேர்ந்து இருந்து உண்ணலாம்படி உள்ளது அல்லவோ? (கண்டு நின் முகவொளி திகழ முறுவல் செய்து நின்றிலையே) - எங்களுடைய இந்த விளையாட்டுக்களைக் கண்டு நீ மகிழ்ந்து, உனது திருமுகத்தின் ஒளியானது நன்கு பரவும்படியாக புன்முறுவல் செய்து நீ நிற்கவில்லை. இப்படியாக இந்த இடத்தில் நீ க்ருபை மற்றும் நியாயத்தைச் செய்யவில்லையே என்று துன்பம் கொண்டனர். (தகவு செய்திலை) - நாங்கள் மணல் வீடு கட்டுவதைக் கண்டு கடைக்கண் மூலமாக உனது திருமுகத்தின் ஒளி மற்றும் புன்முறுவல் ஆகியவற்றைக் காணும்படி நீ செய்யவில்லை. எங்களை நீ கடைக்கண் விடுத்து முழுவதுமாகப் பார்த்தால், நாங்கள் மற்றவர்கள்

போன்றவர்கள் என்று ஆகிவிடுவோம். காதலனைக் கடைக்கண்ணால் அல்லவோ காண்கிறார்கள்? இவனைப் பார்க்காமல் எப்படி சிறு வீடு அமைத்தனர்!

6-2-10. நின்று இலங்கு முடியினாய் இருபத்தோர் கால் அரசு களை கட்ட
வென்றி நீள்மழுவா வியன் ஞாலம் முன் படைத்தாய்
இன்று இவ் ஆயர் குலத்தை வீடு உய்யத் தோன்றிய கருமாணிக்கச் சுடர்
நின் தன்னால் நலிவே படுவோம் என்றும் ஆய்ச்சியோமே

பொருள் – அனைத்து ஜகத்தின் பாதுகாப்பிற்கு எந்த ஒரு தாழ்வும் ஒரு நாளும் உண்டாகாத காரணத்தால், நன்கு நிலை நிற்கும்படியான க்ரீடத்தைக் கொண்டவனும், இருபத்து ஒரு முறைகள் அரசர்களை அழித்த வெற்றியைக் கொண்ட பெரிய கோடாலியைக் கொண்டவனும் என உள்ளவனே! பரந்த இந்த இடத்தை ஸ்ருஷ்டியின்போது உண்டாக்கியவனாக, இந்தக் காலத்திலும் இந்த ஆயர்குலமானது தங்களுடைய குடியுடன் பிழைத்திருக்கும்படியாக அவதரித்த நீல இரத்தினம் ஒளிர்வது போன்ற வடிவத்தைக் கொண்டவனாக உள்ளவனே! இவ்விதம் அனைத்துவிதத்திலும் எங்களுடைய பாதுகாவலனாக உள்ளதால் எங்களுடைய நாயகனும், எங்கள் செருக்கு போன்றவற்றையும் அழித்து, எங்களுடைய இருப்பையும் அளித்து, எங்களுடன் உறவு கொண்டவனும், அனுபவிக்கத்தக்க வடிவம் கொண்டவனும் ஆகிய உன்னால், இடைக்குலத்தில் பிறந்த நாங்கள், எப்போதும் இத்தகைய துன்பங்களை அனுபவிக்கும்படி ஆயிற்றே!

அவதாரிகை – "நின்முகவொளி திகழ முறுவல் செய்து நின்றிலையே" என்று விழுக்காடறியாதே வாய் தப்பச் சொல்லிக் கொண்டு நின்றார்கள்; காலால் அழித்தது சிற்றிலையன்றே; இவர்கள் நெஞ்சில் மறத்தையேயிறே; அந்த மறம் போனவாறே மேல்நோக்கி பாதாதி கேசாந்தமாகப் பார்த்தார்கள்; தங்களை ஜயிக்கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலே தோற்றும்படி நின்றான்; அவ்வடிவில் பிறந்த வேறுபாட்டைச் சொல்லுகிறார்கள்.

விளக்கம் – இவன் அடுத்து தங்களுடன் சேர உள்ளான் என்பதை அறியாமல் கடந்த பாசுரத்தில், "நின்முகவொளி திகழ முறுவல் செய்து நின்றிலையே" என்று உரைத்தனர். இவன் தனது திருவடிகள் கொண்டு அழித்தது இவர்கள் உண்டாக்கிய மணல் வீடுகளை அல்ல, இவர்களுடைய உள்ளத்தில் இருக்கும்

மறத்தை அல்லவோ? அத்தகைய மறம் அழித்த பின்னர், தலையை உயர்த்தியவர்களாக, இவனை, திருவடிகள் தொடங்கி கேசம் முடிய நோக்கினார்கள். தங்களை வெற்றி பெற்ற நிலை தனது தோற்றத்தில் வெளிப்படும்படியாக அவன் நின்றதைக் கண்டனர். அந்த வடிவில் பிறந்த வேறுபாட்டைக் கூறுகிறார்கள்.

வ்யாக்யானம் - (நின்றிலங்கு முடியினாய்) இவர்களை ஜயிப்பதற்கு முன்பு தலைச்சுமையாய்க் காணும் கிடந்தது; இப்போதாயிற்று நற்றரித்து ஒளி விடத் தொடங்கிற்று. சில ராஜாக்கள் தந்தாமெதிரிகளை யழித்து வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணி நிற்குமாபோலே, முன்பே முடிசூடியிருக்கச் செய்தேயும் இவர்களைத் தோற்பிப்பதற்கு முன்பு அஸத் ஸமமாய்க் காணும் இருந்தது. ராவணாதிகளை ஜயித்ததுக்குச் சூடின முடிபோலல்லவிறே ப்ரணயிநிகளை ஜயித்ததுக்குச் சூடின முடியிருப்பது; இவர்கள் அபிஸந்தியைக் குலைத்துப் பொருந்த விட்டுக் கொண்ட பின்பு காணும் மேன்மையையுடையனாய் உஜ்ஜ்வலனுமாய் முடியும் நற்றரித்தது.

விளக்கம் – (நின்றிலங்கு முடியினாய்) - நன்கு நிலை பெற்று ஒளி வீசியபடி உள்ள க்ரீடம் அணிந்தவனே! அப்படியானால் இதற்கு முன்பு இவ்விதம் இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார். இவர்களை வெற்றி கொள்வதற்கு முன்பு, இவனுடைய க்ரீடமானது இவனுடைய திருமுடிக்குப் பாரமாக மட்டுமே இருந்தது; இவர்களை வென்ற பின்னர் நன்றாக அமர்ந்து, நன்கு ஒளி வீசியபடி உள்ளது. ஒரு சில அரசர்கள் தங்களுடைய எதிரிகளை வீழ்த்திய பின்னர் வீரத்திருமுடியும், வெற்றித் திருமுடியும் கொண்டு நிற்பர்; அவர்கள் போன்று, இவன் முன்பே திருமுடி சூடியுள்ளவன் என்றாலும், இவர்களை வெல்வதற்கு முன்பு இத்தகைய க்ரீடமானது, இல்லாத ஒன்றாகவே இருந்தது. ஆனால், அபலைகளை வென்று முடிசூடிக் கொள்ளுதல் என்பது அதிசயமா என்பதற்கு விடை அளிக்கிறார்; இராவணன் போன்றவர்களை வெற்றி கொண்ட பின்னர் சூடிக்கொள்ளும் திருமுடி போன்று, காதலிகளாக வென்ற பின்னர் சூடிக்கொள்ளும் திருமுடி இருப்பதில்லை. இவர்களுடைய அனைத்து எண்ணங்களையும் அழித்து, அவர்களைத் தன்னிடம் பொருந்தும்படியாகச் செய்து, அதன் பின்னர் மேன்மை நிறைந்தவனாக, ஒளிரும்படியாக இருந்தான்; ஆகவே திருமுடியும் நன்கு அமர்ந்தது.

வ்யாக்யானம் – “அபிஷிச்யச லங்காயம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருதக்ருத்ய:” “ஸ்ரீபரதாழ்வானைப் போலே ‘நான் முடி சூடேன் நீர் முடி சூடும்’ என்று முடிக்கு இறாய்க்கிற் செய்வதென்?” என்று உடம்பு வெளுத்துக் காணும் இவரிருந்தது; “ஒருபடி அத்தலைச்சுமையைக் கழித்துப் போந்தோ இதுவும் தலைச்சுமையாகிற் செய்வதென்?” என்று. இக்ஷ்வாகு வம்ச்யர்க்குப் பணியிறே முடிக்கு இறாய்க்கை. அடிக்கு இறாயாதிருக்கையும் முடிக்கு இறாய்க்கையுமிறே ஸ்வரூபம். “அது கிடக்க; உங்கள் அபிஸந்தியைக் குலைத்து உங்களை வென்றோமிறே” என்றான்.

விளக்கம் – இவர்கள் தன் விஷயத்தில் ஈடுபடுத்தியதன் மூலம், தான் செய்யவேண்டிய விஷயத்தைச் செய்தவன் என்றாகிறான்; இதற்கு உதாரணம் காண்பிக்கிறார். பாலகாண்டம் (1-85) - அபிஷிச்யச லங்காயம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருதக்ருத்ய: - இராமன் விபீஷணனை இலங்கையின் அரசனாக முடிசூட்டிய பின்னர், தான் செய்ய வேண்டியதைச் செய்தவன் ஆனான் - என்பது காண்க. சரி, இதன் மூலம் தான் தனது கடமையைச் செய்தவன் என்றானது எப்படி என்பதற்கு விடை அளிக்கிறார். விபீஷணனும் பரதனைப் போன்று “நான் முடிசூடிக் கொள்ளமாட்டேன், நீவிர் சூடிக் கொள்ளும்” என்று திருமுடிக்கு மறுப்பு தெரிவித்தால் என்ன செய்வது என்று தனது திருமேனி வெளுத்து அச்சத்துடன் அல்லவோ இராமன் இருந்தான்? இராமன் அச்சப்பட்டதன் காரணம் அவன் தனது திருவுள்ளத்தில், “நம்முடைய தலைக்கு முன்பு ஏற்படவிருந்த சுமையை ஒருவிதமாகக் கழித்தோம். இப்போது இங்கு அது போன்று சுமை ஏற்பட்டால் என்ன செய்வது?”, என்று எண்ணியதால் ஆகும். பரதன் போன்று விபிஷணனும் பின்வாங்குவான் என்ற சந்தேகம் ஏன் ஏற்பட்டது என்றால், திருமுடியை ஏற்காமல் பின்வாங்குதல் என்பது இக்ஷ்வாகு குலத்தின் இயல்பு என்பதால் ஆகும். இக்ஷ்வாகு வம்சத்தினர்க்கு திருவடியை அளிப்பதில் பின்வாங்காமலும், திருமுடியை மறுப்பதில் பின்வாங்குதலும் ஸ்வரூபம் ஆகும். “நீங்கள் நம்மை நோக்கி, நீண்ட ஒளி வீசும் க்ரீடம் அணிந்தவன் என்று கூறியது இருக்கட்டும். நான் உங்களுடைய எண்ணங்களைத் தகர்த்து உங்களை வெற்றி கொண்டேன் அல்லவோ?”, என்றான்.

வ்யாக்யானம் - (இருபத்தோர் காலித்யாதி) மிடுக்கரான ராஜாக்களை இருபத்தொரு படிகால் வென்ற உனக்கு அபலைகளான எங்களை வெல்லுகை பெரிய பணியோ? “எனக்கு” என்றிருப்பாரையும் உனக்காக்கிக் கொள்ளவல்ல

உனக்கு உனக்கேயா யிருப்பாரை வெல்லுகை பெரிய ஏற்றமோ? ஆசுரப்ரக்ருதிகளாக நாட்டைப் பட அடித்துத் திரிகிற க்ஷத்ரிய குலத்தைக் கிழங்கெடுத்த மிடுக்கனே! களைக்கட்டுகையாவது எடுத்துப் பொகடுகை. ராஜாக்களை வென்றவுனக்கு இடைச்சிகளை வென்றாயென்பது ஓரேற்றமோ? ராஜாக்களை யுந்மூலமாம்படி பண்ணின வெற்றியையுடைத்தான பெரிய மழுவையுடையவனே!

விளக்கம் – (இருபத்தோர் காலித்யாதி) – “உங்களை வென்றோம்” என்று இவன் கூறியதற்கு இவர்கள் மூன்றுவிதமாகப் பதில் கூறுகிறார்கள்; இதனை “மிடுக்கரான”, “எனக்கு என்றிப்பாரை” மற்றும் “ராஜக்களை” என்று கூறுகிறார்கள்; இதன் மூலம் சரீரம், மனம் மற்றும் குலம் காரணமாக ஏற்பட்ட தோல்விகளைக் கூறுகிறார்கள். மிகுந்த கர்வம் கொண்ட அரசர்களை இருபத்து ஒருமுறை வெற்றி கொண்ட உனக்கு, இந்த அபலைகளை வெல்வது என்பது பெரிய செயலாகுமோ? தங்களுக்கு என்று வாழ்ந்தபடி உள்ளவர்களையும் கூட “உனக்கு” என்று எடுத்துக்கொளும் உனக்கு, “உனக்காகவே” என்று வாழ்பவர்களை வெல்லுதல் பெரிய ஏற்றமோ? அஸுர இயல்பு கொண்டு நாட்டைத் துன்புறுத்தியபடி இருந்தக்ஷத்ரிய குலத்தை வேருடன் அழித்தவனே! அரசர்களை வென்ற உனக்கு இடைக்குலத்துப் பெண்களை வெல்வது ஏற்றமோ? அரசர்களை நிர்மூலமாக அழிக்கும்படியான பெரிய கோடாலியை ஆயுதமாகக் கொண்டவனே!

வ்யாக்யானம் - (வியன் ஞாலமுன் படைத்தாய்) ப்ரளயத்திலே உருமாய்ந்து கிடந்த பூமியை யுண்டாக்கினாற் போலேயிறே ப்ரணய ரோஷத்தாலேயழிந்த எங்களை யுண்டாக்கினபடி. வியன் - விஸ்மயம். ப்ரளயங்கொண்ட பூமியையெடுத்தாற்போலே, விரஹ ப்ரளயங் கொண்ட எங்களை யெடுத்தபடி. அங்கு விலக்குவார் இல்லாமையாலே செய்யலாம்; “கழகமேறேல்” என்று நிஷேதிக்கச் செய்தேயன்றோ உண்டாக்கிற்று? (இன்றித்யாதி) “பஹுஸ்யாம்” என்ற பொதுவான ஸ்ருஷ்டி தேடிப் போகவேணுமோ? இவ்விடைக்குலத்தே வந்து பிறந்து, இன்று இவ்விடைச் சாதியை ஸபரிகரமாக வடிவைக் காட்டி ரக்ஷித்தவனன்றோ? ஆச்ரித விஷயத்திற் பண்ணின ஓரம் தன் பேறு என்னுமிடம் வடிவிலே தோன்றும்படி காணும் இருக்கிறது. (வீடுய்ய) “ஸ புத்ர பௌத்ரஸ்ஸகண:” என்கிறபடியே ஸபரிகமாகவுய்ய. (தோன்றிய) ஆவிர்ப்பவித்த ப்ரணயரோஷத்தாலே “சேரோம்” என்றிருக்கிற தங்களைச் சேர்த்தபடியாலே “கருமாணிக்கச்சுடர்” என்கிறார்கள்.

விளக்கம் – (வியன் ஞாலமுன் படைத்தாய்) - ப்ரளயத்தில் தனது உருவம் அழிந்து கிடந்து பூமியைக் காப்பாற்றி மீண்டும் உண்டாக்கியது போன்று ப்ரணய ரோஷத்தால் அழிந்த எங்களை மீண்டும் உண்டாக்கினாய். வியன் என்றால் வியப்பு. இவர்களுக்கு ப்ரளயம் உள்ளதோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ப்ரளயம் கொண்ட பூமியை எடுத்தது போன்று, விரஹம் என்ற ப்ரளயம் கொண்ட எங்களை எடுத்தாய். வியன் என்றால் வியப்படையத்தக்க பூமி அல்லது பரந்து விரிந்த பூமி. ஜகத்தை மீண்டும் படைத்தல் என்பது மிகவும் கடினமாக செயல்; ஆனால் ப்ரணய ரோஷம் என்ற ப்ரளயத்திலிருந்து மீட்பது கடினமான செயலா என்பதற்கு விடை அளிக்கிறார்; ப்ரளயம் கொண்ட பூமியை மீண்டும் உண்டாக்க முயன்றபோது, அந்தச் செயலைத் தடுத்து விலக்குபவர்கள் யாரும் இல்லை என்பதால், அது எளிதாகவே இருந்தது; ஆனால் இங்கு “கழகம் ஏறேல் - எங்கள் கூட்டத்துடன் சேரவேண்டாம்” என்று தள்ளுவதையும் மீறி அல்லவோ செய்ய வேண்டியதாக இருந்தது? (இன்றித்யாதி) – “கருமாணிக்கச் சுடர்” என்பதற்கு மூன்றுவிதமான கருத்துக்கள் உள்ளன. இதனை அடுத்து கூறுகிறார். “தனது வடிவழகு கொண்டு ஆயர்குலத்தை வசீகரித்தவன்” என்பது முதல் கருத்து; இதனை அருளிச் செய்கிறார்; சாந்தோக்யத்தில், “பஹுஸ்யாம் - பலவாகக் கடவேன்” என்று பல பொதுவான ஸ்ருஷ்டிகளாக வரவேண்டுமோ? இந்த ஆயர்குலத்தில் வந்து பிறந்து, இன்று இந்த ஆயர்குலத்தைத் தனது உறவினர்களாகக் கொண்டு, தனது வடிவத்தைக் காண்பித்துக் காத்தவன் அல்லவோ என்பது முதல் கருத்தாகும். அடுத்து “கருமாணிக்கச் சுடர்” என்பதற்கு “இவர்களைக் கரையேற்றிய பின்னர் அவனுடைய வடிவானது புகர் பெற்றது” என்னும் இரண்டாவது கருத்தை அருளிச்செய்கிறார்; அடியார்கள் விஷயத்தில் செய்த உதவியானது தனது பேறாகும் என்பது தனது வடிவத்தில் வெளிப்படும்படியாக உள்ளான். (வீடுய்ய) - ஆயர்குலத்தில் உறவினனாகக் கொண்டதற்கு ப்ரமாணம் “ஸ புத்ர பௌத்ரஸ்ஸகண: - குழந்தை பேரன் ஸஹிதமாக – என்பதாகும். (தோன்றிய) - ஆவிர்ப்பவித்த. அடுத்து “கருமாணிக்கச்சுடர்” என்பதற்கு மூன்றாவது கருத்து அருளிச்செய்கிறார்; ப்ரணய கோபம் காரணமாக “சேரமாட்டோம்” என்று உள்ள தங்களை அவன் வந்து சேர்ந்ததால் “கருமாணிக்கச் சுடர்” என்கிறார்கள்.

வ்யாக்யானம் - (நின்தன்னாலித்யாதி) சத்ருக்களாய் முடிந்து போகப் பெறாதே, ஸம்ஸாரிகளாய் அந்யபரராய்ப் போகப் பெறாதே, நீ நலியவும் நாங்கள் நோவுபடவுமாம்படி சமைந்துவிட்டதிறே! "இரண்டு தலையுங் கூடி மேல்விழுந்தணைத்துக் கொண்டு நின்று சொல்லுகிற வார்த்தையிறே. இவ்வளவும் தங்கள் வெற்றியேயிறே சொல்லிப் போந்தது; இப்போதிறே தங்கள் தோல்விக்கு இசைந்தது. (நலிவே படுவோம்) இதுதான் எங்களுக்கு மெய்யாகப் புகாநின்றதோ? எங்களுடையதேயிறே எங்களுக்கு ஸித்தித்து விடுவது. இவர்களுடையதாவது "கூடிலும் நீங்கிலும் யாம் மெலிதும்" என்று மெலிவேயாயிருக்கை. (ஆய்ச்சியோமே) இடக்கையும் வலக்கையும் அறியாத நாங்கள்.

விளக்கம் – (நின்தன்னாலித்யாதி) - சத்ருக்கள் போன்று முடிந்து போகவும் இயலாமல், ஸம்ஸாரிகளாக இருந்து மற்ற விஷயத்தில் ஈடுபடவும் இயலாமல், நீ துன்புறுத்த, நாங்கள் அதனால் நோவுபட என்று எங்கள் நிலை இப்படியே ஆகிறது. "நலிவே படுவோம் – துன்பமே அடைவோம்" என்பது ப்ரணய கோபத்தால் கூறும் சொற்களோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இரண்டு தலையும் ஒன்றாகச் சேர்ந்து, ஒருவர் மீது ஒருவர் விழுந்து அணைத்துக் கொண்டு கூறும் சொற்கள் அல்லவோ இவை? இதுவரை தங்களுடைய வெற்றியைக் கூறியபடி இருந்தவர்கள் இப்போது தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டனர். (நலிவே படுவோம்) - இப்போது இவனுடைய சேர்க்கை ஏற்பட்ட நேரத்தில், "துன்பமே அடைவோம்" என்று கூறுவது எப்படிப் பொருந்தும் என்பதற்கு விடை அளிக்கிறார்; இது எங்களுக்கு மெய்யாகவே உள்ளதோ என்று எண்ணுகிறார்கள். எங்களுக்கு எது பொருந்துமோ அதுவே எங்களுக்கு ஏற்படும் அல்லவோ? இவர்களுக்கு எது பொருந்தும் என்றால், திருவிருத்தம் (16) - கூடிலும் நீங்கிலும் யாம் மெலிதும் – என்று மெலிந்தபடி இருந்தலே ஆகும். (ஆய்ச்சியோமே) – என்ன செய்யவேண்டும் என்பதை அறியாத இடைப்பெண்கள்.

6.2.11. ஆய்ச்சி ஆகிய அன்னையால் அன்று
வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டு அழு
கூத்த அப்பன் தன்னை குருகூர்ச் சடகோபன்
ஏத்திய தமிழ் மாலை ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து இசையொடும்
நாத்தன்னால் நவில உரைப்பார்க்கு இல்லை நல்குரவே

பொருள் – ஆயர் குலத்தில் பிறந்த யசோதையாகிய தாயால், அன்று “வெண்ணெய் களவு செய்தான்” என்னும் வார்த்தையைக் கேட்டவுடன் சீறப்பட்டவனும், அழுதபடி அவள் முன்பாகத் தோப்புக்கரணம் செய்தவனும், இப்படிப்பட்ட கூத்துக்களை உடையவனும், இந்த உலகிற்கு உதவியபடி உள்ளவனும் ஆகிய க்ருஷ்ணனைக் குறித்து, நம்மாழ்வார் துதி ரூபமாக அருளிச்செய்த தமிழ்மாலைகள் ஆயிரத்தில், இந்த பத்துப் பாசுரங்களையும் இசையுடன் கூடி, நாக்கு உள்ள பயனாக நன்கு உரைப்பவர்களுக்கு, “பகவானை அடையவில்லை” என்ற தரித்ரம் வந்து சேர்வதில்லை.

அவதாரிகை - நிகமத்தில் இத்திருவாய்மொழியை ஸாதரமாகச் சொல்ல வல்லார்க்கு பகவத் தாரித்ர்யமில்லை யென்கிறார்.

விளக்கம் – இந்தத் திருவாய்மொழியை மிகுந்த ஈடுபாட்டுடன் உரைக்கவல்லவர்களுக்கு பகவானை அனுபவிப்பதில் எந்த ஒரு வறுமையும் இல்லை என்கிறார்.

வ்யாக்யானம் - (ஆய்ச்சியாகிய அன்னையால்) க்ஷத்ரிய ஸ்திரீ யொரு தாயும் இடைச்சி யொரு தாயுமாகையாலே, பொதுவறுத்து இடைச்சியாகிய தாயாலேயென்கிறார். தேவகிப்பிராட்டியார் அடிக்கில் இத்தனை நோவாதுபோலேகாணும். “தாயெடுத்த சிறுகோலுக்குளைந்தோடி” என்கிறபடியே “இவள் நம்மையதட்டுவதே!” என்று உளைந்திறே கிடப்பது. தைவமறியத் தாயானதேயிறே தேவகியார் பக்கலுள்ளது; முலைச்சுவடறிந்ததும் முகம் பழகிற்றும் வளர்ந்ததுமெல்லாம் இங்கேயிறே.

விளக்கம் – (ஆய்ச்சியாகிய அன்னையால்) - க்ஷத்ரியர்கள் குலத்தில் பிறந்த ஒரு தாயும், இடையர்கள் குலத்தில் பிறந்த ஒரு தாயும் என்றுள்ளதால், பொதுவாக “இடைச்சியாகிய தாயால்” என்கிறார். தேவகிப்பிராட்டி அடித்தால் இவனுக்கு அத்தனை வலி ஏற்படுவதில்லை. ஆனால் யசோதை அடித்தால் மட்டும் வலிக்குமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; பெரியதிருமொழி (8-3-5) – தாய் எடுத்த சிறுகோலுக்குளைந்தோடி - என்பதற்கு ஏற்ப, “இவள் நம்மை அதட்டுகிறாளே” என்று வருத்தம் கொண்டு நிற்கிறான். ஆனால் தாய் என்ற தன்மை இருவருக்குமே பொதுவாகவே உள்ளபோது யசோதை அடித்தால் மட்டும் பொறுத்துக் கொள்ள இயலாமல் உள்ளதன் காரணம், தெய்வ சாட்சியாக தாயின்

தன்மை மட்டுமே தேவகியிடம் உள்ளது; தாய்ப்பால் பருகியது, தாயின் முகத்தை அறிந்தது போன்ற பலவும் யசோதையிடம் அல்லவோ ஏற்பட்டது?

வ்யாக்யானம் - (அன்று வெண்ணெய் வார்த்தையுள்) ஊரிலே "வெண்ணெய் களவு போயிற்று" என்றார்கள்; அவ்வளவிலே "நாமிறே இதுக்கு இலக்கு" என்று அழப்புக்கான். "மடம் மெழுகுவாரார்" என்ன, "அச்ரோத்ரியன்" என்றார்கள்; "இப்பரப்பெல்லாம் என்னாலே மெழுகப்போமோ?" என்றான், அதுபோலே. ஆரேனுமேதேனும் செய்யிலும் இவனைச் சொல்லும்படியிறே இவன் தீம்புதான்; "பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வாரெல்லாம் உன் மேலன்றிப் போகாது" என்னும்படியிறே யிருப்பது.

விளக்கம் – (அன்று வெண்ணெய் வார்த்தையுள்) - ஊரில் உள்ளவர்கள், "வெண்ணெய் களவு போனது" என்றனர். இந்தச் சொற்களைக் கேட்டவுடன், "இதன் இலக்கு நாமாக அல்லவோ இருப்போம்", என்று தெரிந்து கொண்டு அழத் தொடங்கினான். யாரோ ஒருவர் ஏதோ கூறியதைத் தன் மீது ஏறிட்டுக் கொள்வதற்கு ஓர் உதாரணம் காண்பிக்கிறார்; "மடத்தைத் தூய்மை செய்பவர்கள் யார்?", என்றவுடன், என்ன என்று கூட ஆராயாமல், "அந்தணன் அல்லன்" என்றது போன்று ஆகும்; அவனும், "இந்த அளவிற்குப் பெரிய மடத்தை என்னால் மெழுக இயலுமோ?", என்றான். ஆனால் இவனை யாரும் நேரடியாகக் குற்றம் கூறவில்லை என்றபோதிலும், அந்தப் பழியைத் தன் மீது ஏற்றிக் கொண்டு அழுவதன் காரணம் என்ன என்பதற்கு விடை அளிக்கிறார்; யாரேனும் ஏதேனும் செய்தாலும், இவன் மீது குற்றம் கூறும்படியாக அல்லவோ இவனுடைய துடுக்குத் தன்மையான செயல்கள் உள்ளன? இதற்கு ப்ரமாணம் பெரியாழ்வார் திருமொழி (2-8-5) – பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வாரெல்லாம் உன் மேலன்றிப் போகாது – என்பதாகும்.

வ்யாக்யானம் - (சீற்றமுண்டழு கூத்தவப்பன் தன்னை) தாயார் பொடியப் பொடியுண்டழுகிற தசையில் "பையவே நிலையும்" என்கிறபடியே நிற்கிற நிலை வல்லாராடினாற்போலே இருந்தபடி. அன்றிக்கே, அழுகையாகிற கூத்தையுடைய மஹோபகாரகனை யென்றுமாம். இது ஒன்றுக்கு நிதர்சநமாகச் சொல்லுகிறது: "போகு நம்பீ" என்றும், "கழகமேறேல் நம்பீ" என்றும் இவர்கள் சொன்னபோது நிரபேக்ஷனானவன் கால் வாங்கிப் போகமாட்டாதே நின்ற நிலைக்கு த்யோதகம்.

விளக்கம் – (சீற்றம் உண்டமு கூத்தவப்பன் தன்னை) - தாயானவள் மிகுந்த சீற்றத்துடன் எழுந்து நின்ற நிலையைக் கண்டவுடன், திருவாய்மொழி (5-10-3) – பையவே நிலையும் - என்று கூத்தாடியபடி நின்ற நிலையானது, கூத்தில் வல்லவர்கள் ஆடியது போன்று இருந்தது. அல்லது அழுகை என்னும் கூத்தை ஆடிய மஹா உபகாரகன் என்றும் கூறலாம். "அழு கூத்த அப்பன்" என்று ஏன் கூறினார்? தனது தாயார் தன்னைக் கடிந்து கொண்டபோது கண்ணும் கண்ணீருமாக நின்ற நிலை போன்று இன்று இவர்கள் "எங்கள் திரளில் புகவேண்டாம்" என்று உரைத்தபோது இவன் நின்ற நிலை இருந்ததாக, ஒரு எடுத்துக் காட்டாகக் கூறுகிறார். அதாவது "போகு நம்பீ" என்றும், "கழகம் ஏறேல் நம்பீ" என்றும் அவர்கள் உரைத்தபோது, மற்ற எதிலும் நாட்டம் இல்லாத அவன், அங்கிருந்து அகன்று செல்ல இயலாமல், கால்கள் தடுமாறியபடி நின்ற நிலையைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

வ்யாக்யானம் - (அப்பன் தன்னை) அந்நிலையைக் காட்டிச் சேர்த்துக் கொண்டு தம்மையுண்டாக்கினபடி. (குருகூர்ச்சடகோபன் ஏத்திய தமிழ்மாலை) ப்ரணய ரோஷத்தாலே "போகு நம்பீ" என்றும், "கழகமேறேல் நம்ப்" என்றும், "உன் புள்ளுவமறியாதவர்க்கு உரை நம்பீ" என்றும் சொன்னவையெல்லாம் அந்த ரோஷம் போனவாறே ஏத்தாய்விட்டது. (ஆயிரத்துள் இவையுமோர் பத்து) ஆச்ரிதரோடுண்டான பாவபந்தத்தை வெளியிட்ட அத்விதீயமான பத்து. (இசையொடும்) வாங் மாத்ரத்தாலே. (நவிலவுரைப்பார்க்கு) ஸாதரமாகச் சொல்லுவார்க்கு. (இல்லை நல்குரவே) தாரித்ர்யமில்லை. அதாவது தூதுவிட்டு, அவன் வரக்கொண்டு "புகுர வொட்டோம்" என்று பட்ட க்லேசம் படவேண்டா. சோறும் புடைவையும் கிடைக்குமென்கிறதன்று; பகவத் தாரித்ர்யமில்லை யென்கிறது; "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்றிருக்கிற இவருடைய நல்குரவிறே யாகையாலே. அதிகாராநுகூலமாயிறே அந்நபாநாதிகளுமிருப்பது. "உண்டியே யுடையே யுகந்தோடு மிம்மண்டலத் தொடுங் கூடுவதில்லை யான்" என்கிறவர்கள் இத்தை ஐச்வர்யமாக நினையார்களே. "சென்றொன்றி நின்ற திரு" என்கிறபடியே, அவன் தானே வந்து மேல் விழ நித்யாநுபவம் பண்ணப் பெறுவர்கள். "அழுகூத்தவப்பன்" என்கிறவிடத்திலே "முழுதும் வெண்ணெ யளைந்து தொட்டுண்ணும்" என்கிற பாட்டை யோஜித்துக் கொள்வது.

விளக்கம் - (அப்பன் தன்னை) – "அப்பன்" என்ற சொல்லிற்கு "உபகாரன்" என்று பொருள் கூறினார். இப்போது தன்னைப் பிறப்பித்தவன் என்று கூறுகிறார். இப்படியாகத் தான் நின்ற நிலையைக் காண்பித்து, என்னைத் தன்னுடன் சேர்ப்பதற்காக, இங்கு உண்டாக்கியவன். (குருகூர்ச்சடகோபன் ஏத்திய தமிழ்மாலை) – ப்ரணய கோபம் கொண்ட நிலையில், "விலக்குதல்" என்ற பொருளைக் கூறாமல், "ஏத்திய" என்று ஏன் கூறினார்? ப்ரணய கோபத்தால் "போகு நம்பீ, கழகம் ஏறேல் நம்பீ, உன் புள்ளுவமறியாதவர்க்கு உரை நம்பீ" என்று பலவிதமாகக் கூறியவை அனைத்தும், அந்தக் கோபம் விலகியவுடன் புகழ்வதாகி விட்டது. தனது கோபம் மாறியவராக, அவனைக் கண்டவுடன் துதிப்பதால் ஏற்படும் ப்ரீதி அவனுக்கு உண்டாகும் என்பதால் "ஏத்திய" என்றார். (ஆயிரத்துள் இவையுமோர் பத்து) - அடியார்களுடன் உண்டான ஸம்பந்தத்தை வெளியிட்டதான, இதனைப் போன்று மற்றொன்று இல்லாத பத்துப் பாசுரங்கள். (இசையொடும்) – சொல்லைக் கொண்டு மட்டுமே. (நவில உரைப்பார்க்கு) - விருப்பத்துடன் கூறுபவர்களுக்கு. (இல்லை நல்குரவே) – பகவத் அனுபவத்திற்கு வறுமை இல்லை. அவனுக்காகத் தூது விட்டு, அவன் வந்தவுடன், "உன்னை எங்கள் கூட்டத்தில் புகுர விடமாட்டோம்" என்று முன்னுக்குப் பின் முரணாக உரைத்ததால் அடைந்த துன்பங்கள் ஏதும் அடையவேண்டாம். தரித்ரம் இல்லையென்றால், உண்ண உணவும் உடுக்க உடையும் தடையின்றிக் கிடைக்கும் என்று கருத்து அல்ல, பகவத் அனுபவம் தடையின்றிக் கிட்டும் என்று கருத்து. திருவாய்மொழி (8-7-1) – உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன் – என்று உள்ள இவருக்கு, பகவத் அனுபவம் கிட்டாமல் இருத்தலே வறுமை அல்லவோ? உலக விஷயங்களின் பின்னே செல்லும் அதிகாரிகளுக்குத் தகுதியாக அல்லவோ உணவு போன்றவை உள்ளன. பெருமாள் திருமொழி (3-4) - உண்டியே யுடையே யுகந்தோடு மிம்மண்டலத் தொடுங் கூடுவதில்லை யான் - என்பது போன்று உள்ளவர்கள், உணவு உடை போன்றுவற்றைச் செல்வமாக எண்ணமாட்டனர். வறுமை இல்லை என்றால், எதனைப் பெறுகிறார்கள் என்றால், நான்முகன் திருவந்தாதி (61) – சென்றொன்றி நின்ற திரு – என்பதற்கு ஏற்ப அவன் தானாகவே வந்து இவர்கள் மேல் விழும்படியாக பகவத் அனுபவத்தைப் பெறுகிறார்கள் . "அழுத கூத்த அப்பன்"

என்ற இடத்தில், திருவாய்மொழி (7-8) - முழுதும் வெண்ணெ யளைந்து தொட்டுண்ணும் - என்ற பாசுரத்தையும் நினைவில் கொள்க.

திருவாய்மொழி ஆறாம்பத்து இரண்டாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்